LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

B.A. DEGREE EXAMINATION – **TAMIL**

THIRD SEMESTER – **APRIL 2023**

UTL 3502 – RELIGIOUS AND ETHICAL LITERATURE

Date: 04-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00 PM - 04:00 PM

பகுதி – அ *(10x2=20 மதிப்பெண்கள்)*

விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

01. எட்டாம் திருமுறை எது? பாடியவர் யார்?

02. முதலாழ்வார் மூவர் யாவர்?

03. கிறித்தவக் காப்பியங்களில் சிறப்புவாய்ந்த காப்பியம் எது? எழுதியவர் யார்?

04. தேம்பாவணியின் ஆசிரியர் யார்? அவர் எவ்வூரினர்?

05. முதல் சமயக் காப்பியம் எது? ஆசிரியர் யார்?

06. சிலப்பதிகாரம் உரைக்கும் மூன்று உண்மைகளைக் குறிப்பிடுக.

07. திருக்குறளுக்கு இணையாக எண்ணப்படும் அறஇலக்கியம் எது? பாடியவர் யாவர்?

08. திரிகடும் – பொருள் தருக.

09. ஔவையார் பாடிய அறநூல்களைக் கூறுக.

10. பாரதியாரின் முப்பெரும் படைப்புகளைச் சுட்டுக.

பகுதி – ஆ *(5x7=35 மதிப்பெண்கள்)*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.

11. திருக்கழுமலத்தில் இருக்கும் சிவனை, திருஞானசம்பந்தர் போற்றும் பாங்கினை எழுதுக.

12. வெண்சங்கின் சிறப்புகளாக ஆண்டாள் கூறுவனவற்றைத் தொகுக்க.

13. தேம்பாவணிக் காப்பியம் கூறும் இத்தாலி நாட்டின் சிறப்புகளைக் கூறுக.

14. பராபரக்கண்ணி நவிலும் பரம்பொருளின் பண்புகளைப் பகர்க.

15. பவத்திறம் அறுகெனப் பாவைநோற்ற காதை கூறும் நல்வினை, தீவினைகளைப் பட்டியலிடுக.

16. இனியவை நாற்பது சுட்டும் இனியவற்றை வரிசைப்படுத்துக.

17. பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் நீவிர் விரும்பும் ஏழு வரிகளை எழுதி விளக்கம் தருக.

பகுதி – இ *(3x15=45 மதிப்பெண்கள்)*

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. இராமலிங்க அடிகளாரின் அருள்விளக்கப்பாடற் கருத்துகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

குலசேகர ஆழ்வார், வித்துவக்கோட்டம்மானிடம் வேண்டுவனவற்றைத் தொகுத்துரைக்க.

19. கிறித்தியானின் இறையனுபவங்களை விசிராந்திப்படலம் வழி உரைக்க.

(அல்லது)

வரந்தருகாதை வழி இளங்கோவடிகள் கூறும் அறக்கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

20. நாலடியார் கூறும் கல்வியின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

மூதுரை நவிலும் வாழ்வியல் சிந்தனைகளை ஆய்ந்துரைக்க.

&&&&&&&&&&